LIBRARY
5 NOV 1963
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 16th August 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half past eight of the clock, Mr. Deputy Speaker (SRI K. PARTHASARATHY) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

எஸ். எஸ். எல். சி. தேர்வு

*156 கேள்வி.—**திரு. எஸ். ஆறுமுகம் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் நடந்த எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சையில் கலந்து கொண்ட மாணவர்கள் எத்தனை பேர் ?

(இ) அதில் தேர்ச்சி அடைந்தவர்கள் எத்தனை பேர் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) கலந்துகொண்டவர்கள்—93,490.

(இ) தேர்ச்சி அடைந்தவர்கள்—40,895.

திரு. வி. எஸ். எஸ். மணி : தனியார் நடத்தும் உயர்நிலைப் பள்ளியில் தேர்ச்சி பெற்ற மாணவர்களின் விகிதாசாரம் என்ன ? அரசாங்கம் நடத்துகிற பள்ளியில் தேர்ச்சி பெற்ற மாணவர்களின் விகிதாசாரம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு தனியாகச் சராசரி எடுக்கவில்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : பரிட்சையில் கலந்து கொண்ட 93,490 மாணவர்களில் தேர்ச்சி பெற்றவர்கள் 40,895 ; என்றாலும் இவர்களில், எத்தனை சதவிகிதத்தினர் கல்லூரிகளில் சேர்க்கப் பட்டனர் ? எத்தனை பேர் விண்ணப்பித்துக் கொண்டார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இப்படித் தேர்ச்சி பெற்றவர்களில் எத்தனை பேர் பெண்கள் ? எத்தனை பேர் ஆண்கள் ? பரிட்சையில் கலந்துகொண்டவர்களில் எத்தனை சதவிகிதம் பெண்கள் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள் ? ஆண்களுடைய சதவிகிதம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்தப் புள்ளிவிவரம் என்னிடம் இல்லை.

[16th August 1963

புலவர் கா. கோவிந்தன் : தேர்ச்சி பெற்ற மாணவர்களில் கல்லூரிகளில் சேர்ந்தவர்கள் பாலிடெக்னிகில் சேர்ந்தவர்கள், ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்தவர்கள் போக எதிலுமே இடம் பெறுதவர்கள் எத்தனை பேர் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனியாகக் கேள்வி போட்டால் புள்ளிவிவரம் கொடுக்கலாம்.

திரு. ஜே. மாதா கவுடர் : சென்ற ஆண்டு தேர்ச்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இவ்வாண்டு தேர்ச்சி பெற்ற மாணவர்களின் சதவிகிதம் அதிகமா ? குறைவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. கோ. சி மணி : தேர்ச்சி பெற்ற மாணவர்களில் ஆதித் திராவிட மாணவர்கள் எத்தனை பேர் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்கும் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. எம். தண்டாயுதபாணி : இந்தப் பரிட்சையில் எத்தனை பேர் தமிழில் எழுதினுர்கள் ? எத்தனைப்பேர் ஆங்கிலத்தில் எழுதினுர்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தமிழில் பரிட்சை எழுதியவர் களைவிட ஆங்கிலத்தில் எழுதியவர்கள் எண்ணிக்கை குறைவாகத் தான் இருக்கவேண்டும். அந்தப் புள்ளிவிவரம் என்னிடம் இல்லை.

திரு. சி. ம. அம்பிகாபதி : தேர்ச்சி பெறுதவர்கள் மீண்டும் அதே பள்ளியில் சேர்ந்து படிக்க அனுமதிக்கப்படுவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்கும் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. கே. ஏ. மதியழகன் : கல்லூரிகளுக்கு ஆண்டுதோறும் எத்தனை பேர் விண்ணப்பித்துக்கொள்கிறுர்கள் ? எத்தனை பேர் சேர்த்துக்கொள்ளப்படுகிறுர்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆண்டுதோறும் என்று கேட் டால் எப்படி இப்போது பதில் கொடுக்க முடியும் ? எந்த ஆண்டை யாவது குறிப்பிட்டுத் தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்ல லாம்.

திரு. வி. எஸ். எஸ். மணி : உயர்ந்த பட்ச மார்க் வாங்கி தேர்ச்சி பெற்றவர்களுக்கு "தினத்தந்தி" பரிசுத் திட்டம் ஏற்படுத்தியிருப் பது போல, அரசினரே இப்படி ஏதாவது பரிசுத் திட்டத்தை ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஹரிஜன மாணவர்களுக்கு அந்த திட்டம் இருக்கிறது. எண்டௌமெண்டு மூலம் பல பள்ளிகளில் அந்தமாதிரி திட்டம் இருக்கிறது.

திரு. து. ப. அழகமுத்து : பரிட்சையில் தேறிய மாணவர் களுக்கு அனுப்பப்படவேண்டிய சர்டிபிகேட் புத்தகம் சிலருக்கு இவ்வாண்டு மிகவும் காலதாமதமாக அனுப்பிவைக்கப்பட்டது உண்மையா ?

16th August 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவ்வாறு என்னிடம் புகார் வரவில்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர்: தேர்ச்சி பெருத மாணவர்களில் அநேகமாகப் பலர் சோஷல் ஸ்டடியில் தான் தோற்றுவிட்டார்கள் என்பது உண்மையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எந்த எந்தக் காரணத்தினுல் என்கிற விவரம் என்னிடம் இல்லை. பொதுவாகச் சரியாகப் படிக்காதது தான் ஒரு காரணம்.

திரு. அ. ராகவ ரெட்டி: தனியார்ப் பள்ளிகளில் படித்துத் தேர்ச்சி பெற்றவர்களைவிட ஜில்லா போர்டு பள்ளிகளில் படித்துத் தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதனுல் ஜில்லா போர்டு பள்ளிகளில் சொல்லிக்கொடுக்கும் திறனை இவ்வாண்டாவது அதிகரிக்கச் செய்ய ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் ஒவ்வொரு ஆண்டும் இந்தப் புகாரைச் சொல்லிக் கொண்டிருக்கிறுர்கள். இந்த ஆண்டிலே நல்ல அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: பரிட்சையில் தேர்ச்சி பெற்றவர்களுடைய புள்ளிவிவரத்தை ஜில்லா அடிப்படையில் கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதைப்பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் கொடுக்கலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: ஜில்லா போர்டு பள்ளிகளில் வாத்தியார் இல்லாததனுல் தான் அதிகமான மாணவர்கள் ஃபெயிலாகின்றுர்கள் என்று சொல்லப்படுகிற காரணம் உண்மையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவ்வாறு இருக்க முடியும் என்று என்னுல் ஒத்துக்கொள்ள முடியாது.

Cuddalore Municipality.

* 157. *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state—

(*a*) whether the Government are aware of the reasons for the wholesale resignations of the Chairman and Councillors of Cuddalore Municipality during May 1963; and

(*b*) if so, the steps taken for the continuous functioning of the Municipality?

THE HON. SRI S. M. A. MAJID: (*a*) Yes.

(*b*) As the Municipal administration cannot be carried on with the existing strength of the Municipal council, a notice to show cause against the dissolution of the Municipal Council, Cuddalore, has been issued to the Municipal council. The Commissioner of the Municipality will carry on the normal day-to-day administration of the Municipality.